# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.09.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு

**ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பிற்கான (யுனெஸ்கோ) இலங்கை தேசிய ஆணைக்குழுவை தாபிப்பதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*கல்வி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 55.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.- ஓ. 46/2008*

**ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பிற்கான (யுனெஸ்கோ) இலங்கை தேசிய ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

பாகம் I

**யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுவை தாபித்தல்**

**2.** (1) (இதனகத்துப்பின்னர், "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப் படுதல் வேண்டும். யுனெஸ்கோ விற்கான இலங்கை தேசிய ஆணைக் குழுவை தாபித்தல்

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்படும் பெயரைக்கொண்டு, இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

ஆணைக் குழுவின் குறிக்கோள்கள்

**3**. ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) யுனெஸ்கோவின் திறன்களின் துறையுடன் தொடர்புடைய உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்ட வலையமைப்பு முறைமையை வசதியளிப்பதனூடாக சர்வதேச மற்றும் புலமைசார் ஒத்துழைப்புக்கு தேவையான மன்றத்தினை வழங்குதல்;

(ஆ) யுனெஸ்கோவினால் ஒழுங்குசெய்யப்பட்ட உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவியரீதியிலான நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக கல்வி, அறிவியல், கலாசாரம், வெகுசன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல்கள் தொடர்பான பகுதிகளில் தகவல்களின் பரிமாற்றத்திற்கு வசதியளித்தல், இதனால் யுனெஸ்கோவின் திறமைகள் தொடர்பான தகவல்களுக்கு ஒரு தீர்வு இல்லமாக செயற் படுகின்றது;

(இ) இலங்கை ஒரு கட்சியாக இருக்கின்ற, பரந்த அளவிலான யுனெஸ்கோ சமவாயங்களில் உறுப்பாக அமைந்துள்ள வழிகாட்டு நெறிகளை பின்பற்றுதல் மற்றும் நடைமுறைப் படுத்துவதை கண்காணிப்பதில் அமைச்சுகளுக்கு உதவு தல்;

(ஈ) யுனெஸ்கோ பயனாளிகளுக்கிடையில் ஆராய்ச்சி ஆவணங்கள், வெளியீடுகள் மற்றும் சிறந்த நடைமுறை களில் இருந்து பெற்ற தகவல்கள் ஊடக அறிவைக் கொள்வதற்கு அனுமதிக்கின்ற செயல்நுணுக்கங்களை அணுகுவதற்கு ஊக்குவித்தல் மற்றும் வசதியளித்தல்; அத்துடன்

(உ) வேலையமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை நடத்துவதன் மூலம் கல்வி, அறிவியல், கலாசாரம், வெகுசன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல்களில் தேசிய நிறுவனங்களின் தகைமைகளை கட்டியெழுப்பவதற்கு உதவுதல்.

ஆணைக் குழுவின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

**4**. ஆணைக்குழுவின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்–

(அ) யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான கருமங்களின் மீது இலங்கை அரசாங்கத்திற்கு உதவுதல்;

(ஆ) யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களின் குறிக்கோள்கள், பணிகள் மற்றும் நோக்கங்களின் புரிதலை இலங்கையிலுள்ள யுனெஸ்கோவினுடைய பயனாளிகளுக்கிடையில் ஊக்குவித்தலும் பரப்புதலும் மற்றும் அந்நோக்கத்துக்காக கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகளை நடாத்துதல்;

(இ) இயைபான அரசு மற்றும் உள்ளூர் தன்னாட்சி அமைப்புகள், சர்வதேச அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள், ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள், அரசு மற்றும் அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள், தனியார் மற்றும் அரசாங்கத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஆணைக் குழுவின் குறிக்கோள்களின் எய்தலை நோக்கிப் பணியாற்றுதல்;

(ஈ) இயைபான அமைச்சுக்களினுள்ள தகைமை கட்டியெழுப்புவதன்மீது கவனம் செலுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக கல்வி, அறிவியல், கலாசாரம், வெகுசன ஊடகம், தொடர்பாடல் மற்றும் ஏனைய இயைபான ஒழுக்கநெறிகள் எனும் துறைகளில் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலில் உதவுதல்;

(உ) ஐக்கிய நாடுகளின் முறைமைகளுடனான பங்காண்மை உட்பட அரசு, தனியார் மற்றும் அரசசார்பற்ற பங்காண்மைகளை பங்குதாரர்களுடன் விரிவாக்குதல்;

(ஊ) யுனெஸ்கோ விருதுகள், பெலோஷிப்கள் மற்றும் கல்வி மானியங்கள் மீது மற்றும் விதித்துரைக்கப்பட்ட வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை பரப்புதல்;

(எ) நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியங்களை திரட்டுதல் மற்றும் பெறுதல்;

(ஏ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு கணக்குகளை, சேமிப்பு கணக்குகளை அல்லது வைப்புக் கணக்குகளை திறத்தல் மற்றும் பேணுதல்;

(ஐ) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பணமாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக வாயினுஞ்சரி, உள்நாட்டிலிருந்து அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கொடைகளையும் மானியக்கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதல்:

ஆயின், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக, எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்தினாலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஒ) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதலும் மற்றும் வைத்திருத்தலும், குத்தகைக்கு, ஈட்டுக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், அடைமானம் வைத்தலும் அல்லது விற்பனை செய்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்;

(ஓ) ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல்.

**5.** ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்– ஆணைக் குழுவின் அமைப்பு

(அ) பின்வரும் பதவிவழி உறுபபினர்கள்–

(i) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர்;

(ii) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சின் மேலதிகச் செயலாளர்;

(iii) தொழில்நுட்பம் என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iv) கலாசார மற்றும் சமய அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத் தர்;

(v) வெகுசன ஊடகங்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(vi) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(vii) வெளிநாட்டு உறவுகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(viii) சுற்றாடல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ix) *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,* பல்கலைக் கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்;

(x) யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக் குழுவின் செயலாளர் நாயகம்;

(xi) *1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க,* விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தி னால் தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றத் தின் தவிசாளர்.

(ஆ) (இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், தொழில்நுட்பம், பண்பாடு, வணிகம் மற்றும் கைத்தொழில், தொடர்பாடல், சமாதானம், மனித உரிமைகள், சட்டம், பொது நிர்வாகம், ஊடகவியல், சுற்றாடல் பாதுகாப்பு, அரங்கேற்றக் கலைகள், இசை அல்லது இலக்கியம் ஆகிய துறைகளில் ஆட்களுக் கிடையேயிருந்து நன்கு தேர்ச்சி பெற்றவரான அமைச்ச ரால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

ஆணைக் குழுவின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர்

**6**. (1) அமைச்சர் ஆணைக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ஆணைக்குழுவின் பிரதித் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(3) பிரதி தவிசாளர் ஆணைக்குழுவுக்கு அவர் நியமிக்கப்பட்ட மையானது பயனுறும் வகையில் பதவியை வகிக்கும் வரை, ஆணைக் குழுவில் பதவிவகித்தல் வேண்டும்.

(4) தவிசாளர் சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தமது பதவிக்குரிய தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகிப்பதற்கு புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, பிரதித் தவிசாளர், பிரதித் தவிசாளராக அவரது கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராக செயலாற்றலாம்.

ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப் படுவதற்கான அல்லது தொடர்ந்து இருப்பதற்கான தகைமை யீனங்கள்

**7**. ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு தகமையற்றவராதல் வேண்டும்–

(அ) அவர் பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபை அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வரின்;

(ஆ) அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இலங்கைப் பிரசையாக இல்லாதொழிந்திருப்பின்;

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்குரோத்தாளர் என வெளிப்படுத்தப்பட்டவரும் கடனிறுக்க வகையற்ற தன்மை அல்லது வங்குரோத்தி லிருந்து விடுவிக்கப்படாதவராக இருக்கின்றவருமான ஆளொருவராக, இருப்பின்;

(ஈ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(உ) அவர் ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்திற்கான மறியற்தண்டனையால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஊ) அவர் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(எ) அவர் ஆணைக்குழுவினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படும் ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமை அல்லது நன்மையை வைத்திருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்;

(ஏ) அவர் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் என்ற வகையில் அவரது பணிகள் அவரால் புரியப்படுவதனைப் பங்கப்படுத்தும் விதத்தில் பாதிக்கும் சாத்தியமுள்ளதாக ஏதேனும் நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறையை கொண்டிருப்பாராயின்; அல்லது

(ஐ) அவர் ஆணைக்குழுவின் அனுமதியின்றி ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காதிருப்பின்.

ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலங்கள்

**8**. ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு, பதவிவிலகுகை அல்லது அகற்றுகை மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாககினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறு வகையானதாயினுஞ்சரி, மேலதிகக் காலமொன்றுக்கு மேற்படாமல் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் அகற்றுகை, பதவி விலகுகை முதலியன

**9**. (1) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்நேரத்திலும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது, அமைச்சரினால் அப்பதவி விலகுகை எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக மீள்நியமிக்கப்படுவதற்கோ அல்லது வேறேதேனும் பதவியில் ஆணைக்குழுவிற்குச் சேவையாறறுவதற்கோ தகவுடையவராதலாகாது.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர் 5(ஆ) என்னும் பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேணடுமென்பதுடன் அத்தகைய ஆள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், அமைச்சர் 5(ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய உறுப்பினர் வருகைதராதபோது அவரது இடத்திற்கு செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் வராமைபற்றித் தவிசாளருக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் 5(ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

*ஆணைக் குழுவின் கூட்ட நடப் பெண்ணும் கூட்டங்களும்*

**10.** (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டமும் தவிசாளரினால் தலைமைதாங்கப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதபோது சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், ஆணைக்குழுவின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமொன்று, ஒன்றில்-

(அ) கூட்டத்துக் காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றாகக் கூடுகின்றவர்களும் ஒரு கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எண்ணிக்கையினரான உறுப்பினர்களினாலும்; அல்லது

(ஆ) கூட்டத்தில் பங்குபற்றுகின்றவர்களும் ஒரு கூட்ட நடப் பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின் காலநீட்சியின்போது அதன்மூலம் ஒவ்வொரு பங்குபற்றுகின்ற உறுப்பினரையும் உடனிகழ்கின்றமுறையில் காணமுடியுமானவர்களாகவும் கேட்கமுடியுமானவர்களாகவும் இருக்கின்ற கட்புல-செவிப்புலத் தொடர்பாடலின் மூலமும்,

நடாத்தப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரினது வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், தவிசாளர் அவரது வாக்குடன்சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது ஒவ்வொரு ஆண்டிலும் ஆக குறைந்தது ஒருதடவையாவது கூட்டப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், விசேட அல்லது அதிவிசேட பொதுக் கூட்டங்கள் தேவைப்படினும் மற்றும் தேவைப்படுத்தப்படும் போதும் கூட்டப்படலாம்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டிற்கமைய, ஆணைக்குழு அதனது கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டத்தில் அலுவல்களைக் கொண்டுநடத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்கு படுத்துவதற்கு விதிகளை ஆக்கலாம்.

*ஆணைக் குழுவின் செயல்கள் அல்லது நடவடிக்கை முறைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடி யற்றனவாகக் கருதப்படு தலாகாது*

**11**. ஆணைக்குழுவானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கைமுறை, அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமை காரணமாக அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்ற தாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாக இருப்பதெனக் கருதப்படுதலோ ஆகாது.

*ஆணைக் குழுவின் உறுப்பினர் களின் ஊதியம்*

**12**. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் இலச்சினை*

**13**. ஆணைக்குழுவின் இலச்சினையானது-

(அ) ஆணைக்குழு காலத்துக்குக்காலம் முடிபுசெய்யக்கூடிய வாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(இ) ஆணைக்குழுவின் அனுமதியுடனும் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களினது முன்னிலையிலும்தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப் படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

குழுக்களைத் தாபித்தல்

**14.** (1) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் மூலம் அளிக்கப் பட்டுள்ள, குறித்தளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு உதவுகின்ற அவசியமான அல்லது உசிதமெனக் கருதப்படுகின்ற அத்தகைய எண்ணிக்கை யோரான குழுக்கள் மற்றும் நிபுணர்களை இயைபான அதிகாரி களுடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழு நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுக்கள்–

(அ) கல்வி மீதான குழு;

(ஆ) இயற்கை அறிவியல் மீதான குழு;

(இ) சமூக மற்றும் மனித அறிவியல் மீதான குழு;

(ஈ) கலாசாரம் மீதான குழு;

(உ) தொடர்பாடல் மற்றும் தகவல் மீதான குழு; அத்துடன்

(ஊ) யுனெஸ்கோவின் திறன் துறைக்குள் வருகின்ற இடைநிலைக்குழு.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுக்களின் உறுப்பினர்கள் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம், பொருளியல் அல்லது நிதியியல், கலாசாரம், தொடர்பாடல் மற்றும் உட்கட்டமைப்பு, சட்டம், பொது நிர்வாகம், வெகுசன ஊடகம், கடல்சார்வியல், நிலைபெறுதகு அபிவிருத்தி, ஊடகவியல், சூழலியல் பாதுகாப்பு, அரங்கேற்றக் கலைகள், இசை அல்லது இலக்கியம், கலாசார மரபுரிமை மற்றும் அருங்காட்சியங்கள் அல்லது வேறு ஏதேனும் இயைபான துறைகளில் அத்தகைய தகைமைகள் மற்றும் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்று, அதன் வணிகம் மற்றும் அதன் கூட்டங்களின் கொடுக்கல்வாங்கல்களுக்கான நடவடிக்கைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்களும் நிபுணர்களும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழு தீர்மானிக்கப்பட்டவாறு அத்தகைய கொடுப்பனவுகள் செலுத்தப்படலாமென்பதுடன் குறித்தளிக்கப்பட்ட எவையேனும் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பில் உறப்பட்ட எவையேனும் செலவுகளும் திருப்பிச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(6) குழுக்களின் உறுப்பினர்கள் தீர்மானிக்கப்பட்டக்கூடியவாறாக ஆணைக்குழுவின் நிரந்தர உறுப்பினர்களாகவோ அல்லது அல்லாமலோ இருக்கலாம்.

(7) ஆணைக்குழு அதன் வேறு ஏதேனும் குழுவுடன் சேர்த்து அல்லது கூட்டாக இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்றை தேவைப்படுத்தலாம்.

**15.** (1) இயைபான அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு உதவுவதற்கு 14 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட குழுக்களின் கடமைகள் மற்றும் பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:- *குழுக்களின் கடமைகள் மற்றும் பணிகள்*

(அ) கல்வி மீதான குழு-

(i) அனைத்து கல்வியறிவுக்காகவும் வேலை செயற்பாட்டுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் தேர்ச்சித் திறன்களுக்காகவும் கல்வியை எய்துவதற்காகவும், பணியாற்றுகை சார் கல்வியை ஊக்குவிப்பதற்கான ஆதரவுக்காகவும் மற்றும் நடைமுறை மற்றும் எதிர்கால கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் அவர்களை வைத்திருப்பதற்காக பயனுள்ள கொள்கைகளையும் முறைகளையும் திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் மூன்று அடிப்படைத் துறைகளுக்கு கவனம் செலுத்துதலும்;

(ii) தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) மற்றும் வேலை செய்வோருக்கான திறன் அபிவிருத்தியை ஆரம்பநிலைக் கொள்கை வேலையூடாக மேம்படுத்தலும்;

(iii) முன்பிள்ளைப்பருவத்திலிருந்து உயர்கல்வி வரை திறன் அபிவிருத்தி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் கல்வியின் வேறுபட்ட நிலைகளின் கொள்கை ஆலோசனை மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வியை மேம்படுத்துவதல், வலுவூட்டல் மற்றும் முகாமை செய்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை வழங்குதலும்;

(iv) முழுக்கல்வித்துறையிலும் தாக்கம் செலுத்தக் கூடிய கல்விசார் கொள்கைகள் உட்பட துறை ரீதியான திட்டங்கள் நடைமுறைப்படுத்தலை தயாரிப்பதில், புதுப்பிப்பதில் மற்றும் முகாமை செய்வதில் ஆதரவளித்தலும் சுகாதாரம், சுற்றுச் சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகம் போன்ற அத்தகைய பிரச்சனைகளை விதித்துரைத்தலும்;

(v) முன்பிள்ளைப் பராமரிப்பிலிருந்து உயர்கல்வி வரையிலாக கல்வித் துறையினை உள்ளடக்கிய வாறு பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டத்தி லான யுனெஸ்கோவினுடைய முன்னேற்பாடு களிலிருந்து விதிப்புரைகளை நடைமுறைப் படுத்தலுக்காக தகவல் மற்றும் உதவி வழங்கு தலும்; அத்துடன்

(vi) கல்வியின் யுனெஸ்கோ சர்வதேச பணியகம் (IBE), கல்வி திட்டத்திற்கான யுனெஸ்கோ சர்வதேச நிறுவகம் (IIEP), வாழ்நாள் கற்றலுக்கான யுனெஸ்கோ நிறுவகம் (UIL) மற்றும் கல்வியின் தகவல் தொழில்நுட்பங் களுக்கான யுனெஸ்கோ நிறுவகம் (IITE) கல்வியின் யுனெஸ்கோ வகுதி I நிறுவகங் களுக்கு உதவிசெய்தல்.

(ஆ) இயற்கை விஞ்ஞானம் மீதான குழு-

(i) நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்புக்கான விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் கொள்கை ஆலோசனை மற்றும் தகைமையை கட்டியெழுப்புவதற்கு பின்வருமாறு ஏற்பாடுசெய்தல் மூலம்:-

(அ) ஒருங்கிணைந்த விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் கொள்கை ஊடாக விஞ்ஞானத்தின் பயன்பாட்டை விருத்திசெய்தல்; அத்துடன்

(ஆ) அடிப்படை பொறியியல் மற்றும் பிரயோக விஞ்ஞானங்களில் விஞ் ஞானம், கல்வி மற்றும் தகைமையை கட்டியெழுப்பதலை வலுவூட்டுதல்.

(ii) பின்வருவனவற்றினூடாக நன்னீர், சமுத்திரம் மற்றும் நில வளங்கள் மற்றும் பேரிடர் தயார் நிலையான நிலைபெறுதகு முகாமைத்துவத் துக்கான புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான இயலுமாந்தன்மைகளை தகைமைகளை அபிவிருத்தி செய்தல்:-

(அ) நிலையான முகாமைத்துவம் மற்றும் நன்னீர், நிலப்பரப்பு வளங்கள் மற்றும் பல்வகைமை அதேபோன்று பேரிடர் மீட்பை பாதுகாத்து மேம்படுத்துதல்; அத்துடன்

(ஆ) ஆளுகையை மேம்படுத்துதல் மற்றும் சமுத்திரங்கள் மற்றும் கரையோர வலயங்களை முகாமை செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் அரசுகளுக்கிடை யிலான ஒத்துழைப்பை வளர்த்தல்.

(iii) அறிவியல் துறையில் முக்கிய பங்களிப்பை வழங்கும் நோக்கில் யுனெஸ்கோ, நீர்க்கல்விக் கான நிறுவகம் (IWE), கோட்பாடு இயற் பியலுக்கான சர்வதேச நிறுவகம் (ICTP) மற்றும் ஏனைய யுனெஸ்கோ விசேடத்துவம் பெற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆணைக்குழுக் களான சர்வதேச சமுத்திரவியல் ஆணைக்குழு (IOC), சர்வதேச நீரியல் நிகழ்ச்சித்திட்டம் (IHP), சர்வதேச பூகோள விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டம் (IGCP) மற்றும் மனித மற்றும் உயிர்க்கோள விஞ்ஞானம் நிகழ்ச்சித்திட்டம் (MAB) போன்றவற்றிற்கு உதவுதல்; அத்துடன்

(iv) அனைத்து முக்கிய பங்குதாரர்களிடையே மேம்படுத்தப்பட்ட இணக்கத்தை உருவாக்கும் பொருட்டு நிலையான அபிவிருத்திக்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையில்

பல இரு தரப்பினர்களுட்பட பொது, தனியார் மற்றும் அரசாங்க பங்குதாரர்களுடனான பங்காண்மைகளை மேம்படுத்துதல்.

(இ) சமூக மற்றும் மானுட விஞ்ஞானத்தின் மீதான குழு-

(i) முக்கியமான தேசிய, பிராந்திய மற்றும் பூகோள சமூக சவால்களுக்கு பதிலளிப்பதன் மூலம்:-

(அ) வளர்ந்துவரும் சமூகப் பிரச்சனைகள் மீதான உரையாடல்களை வளர்த்தல் மூலமாக கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடல் நிகழ்ச்சிகள் மூலமாக மனித உரிமைகளை ஊக்குவித்தல்;

(ஆ) இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் விரைவான நகரமயமாக்கல் பிரச்சினைகளை மேவக்கூடியதான கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சி சமுகங்களுக்கு இடையிலான உரையாடலினூடாக தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்திலான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிகளை சமூக தாக்கத்திற்கு அறிவியல் கொள்கைகளை வழங்கும் நோக்கில் சமூக மாற்றத் துறையில் ஆராய்ச்சி மற்றும் கொள்கை இணைப்புகளை வலுப்படுத்துதல்; அத்துடன்

(இ) உடற்கல்வி, விளையாட்டு மற்றும் போதை மருந்தின் மீது கொள்கைகளை மேம்படுத்தல்; அத்துடன்

(ii) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றிற்கான நெறிமுறைகளில் குறிப்பாக உயிரியல்

நெறிமுறைகளில் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் வளர்ந்து வருகின்ற பூகோள நெறிமுறைப் பிரச்சனைகனைகளைத் தீர்த்தல்.

(ஈ) கலாசாரம் மீதான குழு–

(i) உறுதியான மற்றும் அருவமான கலாசார பாரம்பரியத்தை பின்வருவனவற்றினூடாக பாதுகாத்தல், முற்பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்தல்–

(அ) குறிப்பாக, உலக பாரம்பரிய சமவாய வழிகாட்டு நெறிகளை திறம்பட அமுல்படுத்துவதன் ஊடாக கலாசாரம் மற்றும் இயற்கை மரபுரிமை பண்புகளை பாதுகாத்தலும் பேணுதலும்;

(ஆ) கட்டுக்கதைகள், நம்பிக்கைகள், சடங்குகள், நடைமுறைகள், கலாசார வெளிகள், ஊர்வலங்கள், நடனங்கள், அரங்குகள், நாடகம், மந்திரங்கள், தொடர்பாடல் முறைகள் மற்றும் பல போன்ற பகுதிகளை உள்ளடக்கிய அருவமான கலாசார பாரம்பரியம் குறித்த யுனெஸ்கோ 2003 மாநாட்டு வழிகாட்டு நெறிகளை குறிப்பாக மேம்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தலினூடாக வாழும் பாரம்பரியத்தை பாதுகாத்தலும்;

(இ) அருங்காட்சியகங்களின் அபிவிருத்தியினூடாக 1970 மற்றும் 2001 யுனெஸ்கோ சமவாயங்களை குறிப்பாக மேம்படுத்தி நடைமுறைப்படுத்துவதனூடாக அதே போன்று கலாசார பொருட்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான போராட்டத்தை மேம்படுத்துதலும்;

(ஈ) 2001 யுனெஸ்கோ சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதனூடாக நீருக்கடியில் கலாசார பாரம்பரியத்தை பாதுகாத்தல்.

(ii) அமைதியான கலாசாரத்தை வளர்க்கும் நோக்குடன், கலாசார வெளிப்பாடுகள் மற்றும் கலாசாரங்களின் உரையாடலின் பன்முகத் தன்மையை பின்வருவனவற்றினூடாக மேம்படுத்துதல்-

(அ) கலாசார வெளிப்பாடுகளின் பன்முகத் தன்மையை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் கலாசாரம் மற்றும் ஆக்கபூர்வமான தொழில்களின் அபிவிருத்தியினூடாக 2005 யுனெஸ்கோ சமவாயத்தின் வழிகாட்டுநெறிகளை நடைமுறைப்படுத்துதல்;

(ஆ) உரையாடல் மற்றும் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் மற்றும் அபிவிருத்தியில் கலாசாரத்தின் பங்கை முன்னணியில் கொண்டுவருவதற்கும் தேசியக் கொள்கைகளில் கலாசாரங்களுக்கு இடையிலான உரையாடல் மற்றும் கலாசார பன்முகத்தன்மைமை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு.

(உ) தொடர்பாடல் மீதான குழு-

(i) மதியுரை மற்றும் கண்காணிப்பின் ஊடாக தகவலுக்கான அணுகலை விரிவுப்படுத்துவதன் மூலம் கருத்து வெளியிடுதல் மற்றும் தகவல் சுதந்திரத்தை மேம்படுத்துதல்;

(ii) தகவல் மற்றும் அறிவுக்கான உலகளாவிய ரீதியிலான அணுகலுக்கான திறன்களை பின்வருவனவற்றினூடாகக் கட்டியெழுப்புதல்:-

(அ) ஊடக உள்ளடக்கம் மற்றும் தகவல் கல்வி யறிவை அதிகரிப்பதன் மூலம் நிலைபெறு தகு அபிவிருத்திக்கான சுயாதீனமான மற்றும் பல்லின ஊடகம் மற்றும் தொடர்பாடலை வலுப்படுத்தல் மற்றும் தகவல் உரிமையை மேம்படுத்துதல்;

(ஆ) தோதான தகவல் கட்டமைப்புகள் மற்றும் ஊடக வளங்கள் பயிற்சி நிலையங்களின் அபிவிருத்தியின் மூலம் தகவல் மற்றும் அறிவிற்கான உலகலாவிய அணுகலை வளர்த்தல் மற்றும் அறிவைப் பெறுதல் மற்றும் பகிர்வதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

(ஊ) கல்வி, அறிவியல், கலாசாரம், வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடலில் தேசிய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் பங்காண்மையுடன் யுனெஸ்கோவுடன் ஒருங்கிணைவதற்கான இடைநிலைக்குழு.

(2) ஏதேனும் குழு கடமைகள் மற்றும் பணிகளை புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானதாக இருக்கக்கூடிய அறிவு மற்றும் அனுபவம் உள்ளவர்களான ஏனைய ஆட்களை இணைத்துக் கொள்ளலாம்.

பாகம் II

## செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம் மற்றும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினரின் நியமனம்

**16.** (1) அமைச்சர், கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், கலாசாரம், செய்தித் தொடர்பு அல்லது நிர்வாகம் ஆகிய துறைகளில் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத கல்விசார் அல்லது தொழில்முறைசார் அனுபவமுள்ள ஒருவரை ஆணைக்குழுவின் செயலாளர் நாயகமாக நியமித்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் செயலாளர் நாயகத்தின் நியமனம்

(2) செயலாளர் நாயகம் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவுட் பட ஆணைக்குழுவின் அலுவல்களுக்கு பொறுப்பாக இருத்தலும் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் அன்றாட நடவடிக்கைகள்;

(ஆ) ஆணைக்குழுவின் நிதி முகாமைத்துவம்;

(இ) ஆணைக்குழுவின் ஆதனங்களின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஏனைய பணியாட்டொகுதியினரின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு.

(3) செயலாளர் நாயகம், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான நோக்கத்துக்காக அவரால் அவசியமெனக் கருதப்படும் நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் வழிமுறைகளை அமைச்சரின் கவனத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகம், ஆணைக்குழு அல்லது இச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளித்து, உரையாற்றி வாக்களிப்பதற்கு உரித்துடையவராக்கப் படுதல் வேண்டும்.

(5) செயலாளர் நாயகம், தனது கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதில் போதுமான வெளிப்படைத்தன்மை பேணப் படுவனை உறுதிசெய்தல் வேண்டும்.

(6) செயலாளர் நாயகம், ஆணைக்குழுவிற்கு அதனது ஒருப்பாட்டிற்காக மூன்றாண்டு வேலைத்திட்டம், ஆண்டிறுதி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆண்டிறுதி வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(7) செயலாளர் நாயகத்திற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

*ஆணைக் குழுவின் பிரதி செயலாளர் நாயகத்தின் நியமனம்*

**17.** (1) அமைச்சர், கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், கலாசாரம், செய்தித் தொடர்பு அல்லது நிருவாகம் எனும் துறைகளில் பத்து வருட கல்விசார் அல்லது தொழிலாண்மை அனுபவமுள்ளவரான ஆள் ஒருவரை ஆணைக்குழுவின் பிரதி செயலாளர் நாயகமாக நியமித்தல் வேண்டும்.

(2) பிரதிச் செயலாளர் நாயகம், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு செயலாளர் நாயகத்திற்கு உதவுதல் வேண்டும்.

(3) பிரதிச் செயலாளர் நாயகத்திற்கு நிதி எனும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய முறை யிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் வழங்கப் படலாம்.

*செயலாளர் நாயகம் மற்றும் பிரதிச் செயலாளர் நாயகத்தின் பதவிக் காலங்கள்*

**18.** (1) செயலாளர் நாயகமும் மற்றும் பிரதிச் செயலாளர் நாயகமும் மூன்றாண்டு காலப்பகுதி யொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீள்நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய வராதலும் வேண்டும்.

(2) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக செயலா ளர் நாயகத்தை அல்லது பிரதிச் செயலாளர் நாயகத்தை பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) செயலாளர் நாயகம் மற்றும் பிரதிச் செயலாளர் நாயகத்தின் பதவி இறப்பு, பதவியிலிருந்து அகற்றப்படுவதல் அல்லது அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தினாலான பதவிவிலகல் மூலம் வறிதாதல் வேண்டும்.

(4) செயலாளர் நாயகத்தின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், அத்தகைய பதவிக்கு நியமனமொன்று செய்யப்படும் வரை, செயலாளர் நாயகத்தின் கடமை களைப் புரிவதற்கு, அமைச்சர் பிரதிச் செயலாளர் தலைமையதிபதியை நியமிக்கலாம்.

ஆணைக் குழுவின் பணியாட் டொகுதி

**19.** (1) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்கள் மற்றும் பணிகளை வினைத்திறனாக பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கையோரான அலுவலர்களையும் ஊழியர்களையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னங்கீகாரத்துடன் நியமிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில், அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்காற்றுக்கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து விலக்குவதுடன் அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்.

(3) ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையின் பேரில் அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சேவையின் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்தாதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழு அரசசேவைக்கு வெளியிலிருந்து ஆட்சேர்க்கப் பட்டவர்களாக மற்றும் ஏதேனும் அத்தகைய செயற்றிட்டத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடியவர்களான ஆணைக்குழுவின் அலு வலர்கள் மற்றும் சேவையாளர்களின் நன்மைக்காக சகாய நிதியத் திட்டங்களை தாபிக்கலாம் மற்றும் ஒழுங்கப்படுத்தலாம்.

ஆணைக் குழுவின் பணியாட் டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்

**20.** (1) செயலாளர் நாயகத்தின் வேண்டுகோளின் பேரில் மற்றும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலர், அவ் அலுவலரின் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் அதே போன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக குறித்தளிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அத்தகைய அலுவலர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அத்தகைய அலுவலர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங் களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவனங்களி லிருந்தான அலுவலர்களை ஆணைக் குழுவுக்கு நியமித்தல்

**21.** ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், அவ்வலுவலரினதும் அல்லது ஊழியரினதும், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான

நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அத்தகைய நியமனமானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான ஒரு காலப் பகுதிக்காக இருத்தல் வேண்டு மென்பதுடன், ஆணைக்குழுவினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனை களின்மீது, அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட் டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினது வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் III

## நிதி

**22.** ஆணைக்குழுவின் ஆரம்ப மூலதனம்– *ஆணைக் குழுவின் மூலதனம்*

(அ) தீர்மானம் என்ற வழிமூலம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானதான அத்தகைய தொகையாக இருக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அல்லது பாராளுமன்றத் தின் ஏதேனும் தீர்மானத்தின் மூலம் அதிகாரமளிக் கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளால் அதிகரிக்கப்படலாம்.

**23.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். *ஆணைக் குழுவின் நிதியம்*

(2) ஆணைக்குழுவின் நிதியம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்–

(அ) பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலிருந்தோ ஏதேனும் மூலத்திலிருந்தான முதலீடுகள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்பவற்றின் வட்டி என்ற வழியாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது, அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் மற்றும் இலங்கையினுள் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்தினாலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டுமென்பதுடன் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக் கப்படுதலும் வேண்டும். அத்துடன் அதன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் முதலீடுகளிலிருந்து வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணத் தொகைகள்.

(3) பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்தினுட் செலுத்தப் படுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது அதன் கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**24.** ஆணைக்குழுவானது அது தோதானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் வங்கியுடன் ஏதேனும் கணக்கைத் திறந்து பேணலாமென்பதுடன் அத்தகைய கணக்கு, அரசாங்கத்தின் நிலவுகின்ற நிதி ஒழுங்குவிதிகளுக்கிணங்கத் தொழிற்படுத்தப் படுதலும் வேண்டும். *ஆணைக்குழுவானது கணக்குகளைப் பேணுதல்*

**25.** ஆணைக்குழுவிற்குச் சொந்தமான எவையேனும் பணங்கள் அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப் படலாமென்பதுடன் அமைச்சரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகள் எனும் விடயத்தில் தீர்மானிக்கப் படக்கூடியவாறு அத்தகைய முதலீடுகளிலிருந்து திரட்டுகின்ற வருமானத்தை சேகரித்தலும் வேண்டும். *ஆணைக்குழுவின் பணங்களை முதலீடு செய்தல்*

**26.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேணடும். *ஆணைக்குழுவின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் VI

## பொதுவானவை

*அமைச்சரின் பணிப்புகள்*

**27**. (1) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை காலத்துக்குக் காலம் எழுத்தில் ஆணைக்குழுவிற்குப் வழங்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புகளுடன் இணங்கியொழுகுவது ஆணைக்குழுவின் கடமையாதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர் காலத்துக்குக் காலம், ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அனைத்தையும் அல்லது ஏதேனும் ஒன்றை அவர் குறித்துரைக்கும் அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் விசாரித்து அறிக்கையளிக்க கட்டளையிடலாம், மேலும் அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்படும்போது, ஆணைக்குழுவானது அத்தகைய அனைத்து வசதிகளையும் வழங்குவதுடன் அத்தகைய கட்டளைக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு கொடுத்துதவுதலும் வேண்டும்.

*ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு முனனர் சமர்ப்பித்தல்*

**28**. ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னரான ஆறு மாத காலப்பகுதியினுள், அவ் ஆண்டின் போது அதன் செயற்பாடுகள் பற்றிய முழுக் கணக்கறிக்கையை, அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தின் முன் இடப்படுவதற்கு செய்யத்தவரான அமைச்சருக்கு அத்தகைய அறிக்கை தொடர்புடையதான ஆண்டைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**29**. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்கள், ஆணைக்குழுவின் அலுவலர்களும் மற்றும் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**30**. ஆணைக்குழுவானது (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் அட்டவணைமயப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*ஆணைக்குழுவானது அட்டவணைமயப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்*

**31**. (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவிற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் ஆணைக்குழுவின் அத்தகைய நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் செயல் அல்லது ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கான பாதுகாப்பு*

(2) ஆளொருவரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால் அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**32**. (1) ஆணைக்குழுவானது பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்கலாம்-

*விதிகள்*

(அ) அலுவலர்களை நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(ஆ) ஆணைக்குழுவின் கூட்டங்களை, வருடாந்தப் பொதுக்கூட்டத்தை மற்றும் அதிவிசேட கூட்டங்களை கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(இ) ஆணைக்குழுவின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைசசரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டின் மேல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**33.** (1) அமைச்சர் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பில் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது விதித்துரைக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அதன் வெளியீட்டிலிருந்து மூன்றுமாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதியொன்று உட்பிரிவு (3) இன் கீழ் எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்**

**34.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவழியாக தேவைப்படுத்தினாலொழிய-

"நிபுணர்" என்பது யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்களின் ஏதேனும் ஒரு பகுதியில் விசேடத்துவமான திறமையுடைய தொழிலாண்மையாளர்கள் எனப் பொருளாகும்;

"அமைச்சர்" என்பது அரசியலமைப்பின் உறுப்புரை **44** அல்லது **45** இன் கீழ் கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் எனப் பொருளாகும்;

"யுனெஸ்கோ" என்பது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு ஒழுங்கமைப்பு எனப் பொருளாகும்.

"யுனெஸ்கோ நிகழ்ச்சித்திட்டங்கள்" என்பது யுனெஸ்கோவின் திறன்களைக் கொண்ட ஐந்து பகுதிகள் எனப் பொருளாகுமென்பதுடன் கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மானுட விஞ்ஞானம், கலாசாரம் மற்றும் தகவல் தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்**

**35.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.